தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகம்
கோயம்புத்தூர் - 641 003

முனைவர். மு. ஜெகதீசன் Ph.D.,
உதவி மக்கள் தொடர்பு அலுவலர்
கைப்பேசி: 94890 56730

தொலைபேசி: 0422 - 6611302
நிகரி: 0422 - 2431821
மின்னஞ்சல்: pro@tnau.ac.in

தேதி: 6-1-2016

அன்புள்ள ஐயா அவர்களுக்கு,

வணக்கம்.

தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகத்தின் **உழவர் தின விழா ஜனவரி 8, 2015 (வெள்ளிக்கிழமை) அன்று காலை 9.30 மணியளவில் பல்கலைக்கழக பட்டமளிப்பு விழா அரங்கில்** நடைபெற உள்ளது. (அழைப்பிதழ் இணைக்கப்பட்டுள்ளது).

இவ்விழாவில் **மாண்புமிகு வீட்டுவசதி, நகர்ப்புற வளர்ச்சித்துறை, வேளாண்மைத் துறை அமைச்சர் மற்றும் வேளாண் பல்கலைக்கழக இணைவேந்தர் திரு. ஆர். வைத்திலிங்கம் அவர்கள், மாண்புமிகு நகராட்சி நிர்வாகம், ஊரகவளர்ச்சித்துறை, சட்டம், நீதிமன்றம் மற்றும் சிறைச்சாலைகள் துறை அமைச்சர் எஸ்.பி. வேலுமணி அவர்கள், மாண்புமிகு தமிழக சட்டப்பேரவைத் துணைத்தலைவர் திரு. பொள்ளாச்சி வ. ஜெயராமன் அவர்கள்** மற்றும் பல முக்கிய பிரமுகர்கள் கலந்துகொள்ள இருக்கிறார்கள்.

எனவே, தங்களுடைய மேலான **நிருபர் மற்றும் புகைப்பட நிருபர்** இந்நிகழ்ச்சியில் கலந்துகொண்டு, தங்களுடைய மேலான நாளிதழ் / வானொலி / தொலைக்காட்சி / பத்திரிகையில் செய்தியினை வெளியிடுமாறு அன்புடன் கேட்டுக்கொள்கிறேன்.

நிருபர்கள் வசதிக்காக, மாவட்ட ஆட்சியர் அலுவலக வளாகத்திலிருந்து இப்பல்கலைக்கழக வளாகத்திற்கும், விழா முடிவிற்கு பின்னர் மாவட்ட ஆட்சியர் அலுவலக வளாகம் வரைக்கும் வாகன வசதி செய்யப்பட்டுள்ளது. **வாகனங்கள் மாவட்ட ஆட்சியர் அலுவலக வளாகத்திலிருந்து காலை 8.00 மணியளவில் புறப்படும்.**

இந்நிகழ்ச்சி சிறப்பாக நடைபெற தங்களுடைய மேலான ஒத்துழைப்பை நல்குமாறு அன்புடன் கேட்டுக்கொள்கிறேன்.

நன்றி, வணக்கம்,

தங்கள் உண்மையுள்ள,

**Sd/-------**

மக்கள் தொடர்பு அலுவலர்

பெறுநர்,
ஆசிரியர் / நிருபர்